Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 127 /2023

## Deposition of P.W.6

Name : மருத்துவர் திருமதி. லதா

Husband's Name : வெங்கடேஷ்வரன்

Village : ஆலங்குடி

Religion : இந்து

Age : **36 /2024**

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.08.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது ஆலங்குடி அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த **13.05.2023**ஆம் தேதி காலை **11.30** மணியளவில் நான் ஆலங்குடி அரசு மருத்துவமனை பணியில் இருந்தபோது மாங்கோட்டை, எம்.தெற்கு தெருவை சேர்ந்த தமிழ்செல்வன் மகன் அரவிந்த் என்பவரை அவரது சகோதரர் மணிகண்டன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் தன்னை அதே தினம் காலை **11.00** மணியளவில் சம்மட்டிவிடுதி **4** ரோடு பகுதியில் வைத்து தெரிந்த ஒரு நபர் அருவாளால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது இடது கையில் ஆழமான கிழிந்த காயமும், மார்பு பகுதியில் **5x1x1** செ.மீ. அளவில் சிராய்ப்பு காயமும், இடது கையில் நரம்பு அறுந்த நிலையில் இரத்தத்துடன் காயம் ஒன்றும் காணப்பட்டது. அவரை மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் மேல்சிகிச்சைக்காக அங்கு செல்லவில்லை. தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துள்ளார். எனவே, அரவிந்த் என்பவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் கருத்துரை வழங்க இயலாது என்று சான்று வழங்கினேன். அரவிந்த் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** பின்னர் அதே நாள், அதே சம்பவத்தில் காயம்பட்டதாக கூறி காலை **11.40** மணிக்கு மாங்கோட்டை குருவினான்கோட்டை கிராமத்தை சேர்ந்த தமிழ்செல்வன் மகன் வெங்கடாசலம் என்பவரை ராஜேந்திரன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை

விசாரித்தபோது அதே தினம் காலை **11.00** மணியளவில் என்னை தெரிந்த ஒரு நபர் கத்தியால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது இடது கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து **14.05.2023** அன்று விடுவிப்பு செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். வெங்கடாசலம் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

<u>ம.வி.இல்லை</u>